# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
# (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:– 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42–ஆம் விதி, 53–ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII–ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்
(IN THE COURT
OF THE III–ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :– | S.C.No. 187/2019 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண் | :– | அ.சா– 06 ( PW– 06) |
| பெயர் | :– | லட்சுமி |
| கணவரின்/தகப்பனாரின் பெயர் | :– | |
| ஊர் | :– | |
| வருவாய் வட்டம் | :– | |
| சமூகம் (சாதி) | :– | |
| தொழில் | :– | |
| மதம்/சமயம் | :– | |
| வயது | :– | |

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 10 ஆம் நாள் 1969–ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**சான்றாளரின் கையொப்பம்**

எதிரிகள் தோன்றினார்கள். எதிரிகளின் வழக்குரைஞர் தோன்றினார்.

முதல்விசாரணை:–

நான் மேட்டூரில் கற்பகம் திரையறங்கம் இருக்கும் இடத்தில் வசிக்கிறேன். நான் மூங்கில் கூடை பின்னும் வேலை செய்கிறேன். நான் சுமார் 25 ஆண்டுகளாக அந்த வேலை செய்கிறேன். அமிர்தராஜை தெரியும். நீதிமன்றத்தில் தோன்றியுள்ள எதிரிகளை எனக்குத் தெரியாது. நான் இந்துஸ்தான் தாபா கடையில் பாத்திரம் கழுவும் வேலைக்கு சென்றேன். சுமார் 07-08 ஆண்டுகள் இருக்கும். ஒருநாள் காலை 11.00 மணி இருக்கும். நான் அந்த கடையில் பாத்திரங்களை கழுவிக்கொண்டிருந்தேன். முகமூடி அணிந்துகொண்டு ஆட்கள் அந்த கடைக்குள் ஓடி வந்தனர். அதை பார்த்ததும் நான் பயந்து அங்கிருந்து ஓடிவிட்டேன்.

மறுநாள் நான் வேலைக்கு சென்றேன். அங்கு கடை இயங்கவில்லை. ஏன் கடை வைக்கவில்லை என்று எனக்குத் தெரியவில்லை.

**அரசு தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க பிறழ் சான்றாளராக பாவிக்கப்பட்டார். விடைபொதி வினாக்கள் கேட்க அனுமதி வழங்கப்பட்டது.**

ஏற்கனவே நான் வேறு ஒரு நீதிமன்றத்தில் விசாரிக்கபட்டேன் என்றால் சரிதான். 19.12.2017-ஆம் தேதியன்று பகல் 01.30 மணியளவில் தாபாவில் பாத்தியம் கழுவி கொண்டிருந்தேன் என்றால் சரிதான். அப்போது இருச் சக்கர வாகனத்தில் வந்து ஒருவர் தாபா உணவகத்தில் உட்கார்ந்தார் என்றால் நான் பார்க்கவில்லை. ஒரு கருப்பு நிற மகிழுந்து ஒன்று வந்தது என்றால் நான் பார்க்கவில்லை. அந்த மகிழுந்தில் இருந்து 04,05 நபர்கள் இறங்கி வீச்சு அருவாள் பட்டா கத்தியுடன் தாபாவில் உட்கார்ந்த நபரை நோக்கி சென்றார்கள் என்றால் சரிதான். நான் பார்த்தபோது தாபா உணவகத்தில் வாசலின் கதவை மறித்துக்கொண்டார்கள் என்றால் அதை நான்

பார்க்கவில்லை. அந்த கும்பலில் ஒருவர் டேய் பாரதி ராஜா இவரை போடுங்கடா என்று சொன்னார் என்றால் அது எனக்கு தெரியாது. உணவகத்தில் இருந்த அமிர்தராஜ் என்பவரை கையை காட்டி வீச்சருவாள் மற்றும் பட்டா கத்தியால் வெட்டினார்கள் என்றாலும் அந்த கும்பலில் மற்றொருவர் நடராஜ் இவரை போட்டு தள்ளுங்கள் என்று சொன்னதாகவும் மற்றொருவரை அரிவாளால் வெட்டினார்கள் என்றும் அந்த நபருக்கு தலை மற்றும் கைகளில் காயம் ஏற்பட்டு தப்பித்து ஓடிவிட்டதாகவும் அந்த சமயத்தில் அவர்களை தள்ளிக்கொண்டு அமிர்தராஜ் என்பவர் சமையல் அறை வாசலில் விழுந்துவிட்டாதாகவும் அந்த இடத்திலே அந்த கும்பல் அமிர்தராஜை கொலை செய்துவிட்டு அவர்கள் வந்த மகிழுந்தில் ஏறி பவானி சென்றுவிடார்கள் என்றும் பின்னால் பெயர் கேட்டு தெரிந்த கொண்ட ஸ்டாலின் என்பவர் இருச் சக்கர வாகனத்தில் ஏறி சென்றிவிட்டார் என்றும் பின்னர் காயம் பட்ட நபரை யார் என்று விசாரித்தபோது அவர் ராமன்நகரை சேர்ந்த முரளிதரன் என்றும் இறந்து போன அமிர்தராஜின் நண்பர் என்று தெரிந்துகொண்டேன் என்றும் ஸ்டாலிக்கும் சதீஸ்குமாருக்கும் இருந்த வீட்டு சம்மந்தமாக பிரச்சனை குறித்து பேசவந்தபோது இந்த சம்பவம் நடந்ததாகவும் தெரிந்து கொண்டேன் என்றும் காவல் துறையினர் விசாரித்தபோது சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை**

இல்லை.

Sd/-V. Pugazhenthi,
Additional District & Session Judge, Salem.